# பூ




தண்டவாளத்தைக் கடக்கையில்
கண்டேன்
பெயர் தெரியாத ஒரு
பூ.

அதற்கொரு பெயர் சூட்டி
உலகத்து மொழிகள்
அத்தனையிலும்
உச்சரிக்க விரும்பினேன்.

நின்ற இடத்தில் நின்று
ஜெயித்துப் பூத்த
பூவைப் பார்த்து ஒரு கணம்
நின்றேன்.

பிளாட்பாரத்திலிருந்து
பயணிகள் அலற
வேகமாய் என்னை  நோக்கிய
மின்சார ரயிலிலிருந்து
தப்பித் தாவினேன்.

ரயில் கடக்க
தண்டவாளத்தில் இறங்கித்
தேடினேன்.

காணவில்லை
பூ